Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 213

புதன்கிழமை
26 ஜூன் 2024

ஆனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"உந்தக் கடல் பிரச்சினை இன்னும் எத்தினை பேரைக் காவு வாங்கப் போகுதோ?"




## ஜனாதிபதி ரணில் இன்று விசேட உரை

கொழும்பு, ஜூன் 26
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை இரவு 8 மணியளவில் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளாரென அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில்

15

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்;

# சர்வதேச விசாரணையை உடன் முன்னெடுங்கள்!

## கொள்ளை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 26
திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2021 ஆம் ஆண்டில் ஆயிரத்து 202 பேரும், 2022 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 956 பேரும், 2023 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 687 பேரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாகச் சிறையிடப்பட்டுள்ளனர்.
அத்துடன், திருட்டு மற்றும்

15

அத்துமீறிய மீனவர்களைப் பிடிக்க முயன்ற

# கடற்படைச்சிப்பாய் நடுக்கடலில் சாவு!

காங்கேசன் கடற்பரப்பில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கச் சென்ற ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர், இந்திய மீனவர்களின் படகால் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

15

## உறவுகள் நேற்றுப் போர்

கிளிநொச்சி, ஜூன் 26
காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றுச்செவ்வாய்க்கிழமை காலை போராட்டமொன்று முன்னெடுக்

15



## மிக்ஸருக்குள் பல்லி!

யாழ்ப்பாணம், ஜூன் 26
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் விற்கப்பட்ட மிக்ஸருக்

15

கடந்த மூன்று மாதங்களில்

## யாழில் 31 பேர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மூன்று மாதங்களில் ஏற்பட்ட விபத்துகளால் 31 பேர் உயிரிழந்தனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார். (அ-ம-125)



வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால் சங்கானையில் நேற்று அம்மாச்சி உணவகம் திறந்து வைக்கப்பட்டது. *(ம-26-125)*

## அசாஞ்சே விடுதலை



லண்டன், ஜூன் 26
விக்கிலீக்ஸின் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேக்கு பிணை வழங்கி பிரிட்டனின் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
விக்கிலீக்ஸ் மூலம் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது அமெரிக்கா இழைத்த போர்க்குற்றங்கள் தொடர்பில் அசாஞ்சே ஆவணப்படுத்தியிருந்தார்.
அத்துடன் அமெரிக்காவின் இராணுவ இரகசியக் கோப்புகளையும்

15

## 64 பவுண் நகை ஆலயத்தில் திருட்டு

ஊர்காவற்றுறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
ஊர்காவற்றுறை - புளியங்கூடல் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயமொன்றில் வைக்

15

## உயர்கல்வித்துறை அத்தியாவசிய சேவை?

கொழும்பு, ஜூன் 26
கல்வி மற்றும் உயர்கல்வித்துறைகளை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஒருதுறையை அல்லது சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்தால், அந்தத் துறையில் உள்ளவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தடைகளும் கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுகின்றன.
இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்கள், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை வலிந்து திணிக்காது நிலைப்பாட்டைக் கேட்டறிக!

தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

**தமிழ்பேசும் மக்களுக்கு இதுதான் தீர்வு என்று அதனைப் பலவந்தமாகத் திணிக்கவேண்டாம். முதலில் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டும். பின்னரே புதிய அரசமைப்பு ஊடாக அதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும்.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இனப்பிரச்சினைக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தீர்வு காணப்படும். அவ்வாறு தீர்வு காணும்வரை மாகாணசபை முறைமை தொடரும். தேர்தலும் நடத்தப்படும்.

புதிய அரசமைப்பின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும். ஒரு கட்சியால் இதனை செய்யமுடியாது. அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் அவசியம். இது தான் தீர்வு என தமிழ்பேசும் மக்களுக்கு அதனைத் திணிக்கமுடியாது.

எனவே, மக்களுடனும் கலந்துரையாடவேண்டும். தீர்வு காணும் காலம் எல்லை எவ்வாறு அமையும் என்பது மக்கள் எமக்கு வழங்கும் ஆணையிலேயே தங்கியுள்ளது- என்றார். (ச-44)

## '13' நடைமுறையென வழிதவறும் ஜே.வி.பி.

உவிந்து சாடல்

கொழும்பு, ஜூன் 26

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இணக்கம் தெரிவித்தமையானது இலக்குகளிலிருந்து விலகிச் செல்வதற்கான சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறு இரண்டாம் தலைமுறை அரசியல் அமைப்பின் தலைவர் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் அனைத்துத் தேர்தலிலும் இரண்டாம் தலைமுறை வேட்பாளர்கள் முன்னிறுத்தப்படுவார்கள். தற்போதுள்ள ஊழல் அரசமைப்பில் கூட்டணி வைக்க நாம் தயாராக இல்லை.

தலைவர்கள் இறந்தபோது சில அரசியல் கட்சிகள் பல துணைக்குழுக்களாக உடைந்துவிட்டன. இன்று ஜே.வி.பி.க்கும் இதேகதி ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-6)

## பொய் வதந்திகளால் பலமுறை இறந்தேன்

காணொலி வெளியிட்டு அப்துல் ஹமீத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

நான் இறக்கவில்லை, மாண்டவன் மீண்டு வந்து பேசுகிறேன் என எல்லோரும் வியந்து நோக்கக்கூடும். பரப்பப்படும் விஷமச் செய்திகள் மூலம் தான் செத்துப் பிழைத்து மூன்றாவது சந்தர்ப்பம் இது. எந்த ஒரு செய்தியையும் தீர விசாரித்து நிச்சயப்படுத்திய பிறகே பதிவிடும் ஊடகப் பண்புதான் இறந்துவிட்டது என்று புகழ்பெற்ற அறிவிப்பாளர் பி.எச்.அப்துல்ஹமீத் தெரிவித்துள்ளார்.

'உலகத் தமிழர்களிடையே சிம்மாசனம் போட்டு என்றென்றும் நிலைத்திருக்கும் பிரபல அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் காலமானார்' என்ற செய்தி கடந்த தினத்தில் சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அப்துல் ஹமீத் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் நேரடியாக பேசும் காணொலியொன்றைப் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அந்த விஷமச் செய்தியை கேள்வியுற்ற பல்லாயிரம் அன்பு உள்ளங்கள் தொலைபேசியில் என்னை அழைத்து எனது குரலைக் கேட்ட பின்புதான் நான் உயிரோடு இருப்பதை நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். பலர் தனது குரலை கேட்டதும் கதறி அழுது வேதனையடைந்தனர். இத்தனை ஆயிரம் அன்பு உள்ளங்களை நான் பெற என்ன தவம் செய்து ஈன்றாளோ என் அன்னை என நான் நினைத்துக்கொண்டேன். இதுபோன்று விஷமச் செய்திகள் மூலம் தான் செத்துப் பிழைத்த மூன்றாவது சந்தர்ப்பம் - என்றார். (ச-100)

## நாட்டுக்காகச் செய்வேன் பொன்சேகா சூசகம்!

கொழும்பு, ஜூன் 26

நாடு எதிர்நோக்கும் எந்தச் சவாலையும் ஏற்கத்தயார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சார்ந்த கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்த நிலையிலேயே சரத் பொன்சேகா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்பப்போவது யார்? என்பதை மக்கள் தீர்மானிக்கவேண்டும். இதுவரை அப்படி யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறான ஒரு தலைவரை மக்கள் தெரிவு செய்யவேண்டுமென்பதே எனது அவா என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எந்தக்கட்சியுடனும் இணைந்து சுயாதீன ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்கு சரத் பொன்சேகா தயாராகவுள்ளார் என சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-25,6)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு இல்லை!

தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

80 வீதமான பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேர்தலில் வாக்களிப்பது பற்றிய விழிப்புணர்வு இல்லையென தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நாங்கள் பல்கலைக்கழக மாணவர்களிடையே மேற்கொண்ட ஆய்வில், மாணவர்கள் யாருக்கு வாக்களிப்பது என தமது பெற்றோரிடமே ஆலோசனை கேட்பதாகத் தெரிவித்துள்ளனர். முன்னைய காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கினார்கள். இப்போது பெற்றோரிடம் ஆலோசனை கேட்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25-6)

## புதுச்சின்னத்தில் சுதந்திரக்கட்சி

விஜயதாஸ அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி புதிய சின்னத்தை அறிமுகப்படுத்தி களமிறங்கும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

6 தேர்தல்களில் கதிரை, வெற்றிலை, அன்னம் மற்றும் மொட்டுச் சின்னங்களில் சுதந்திரக் கட்சி போட்டியிட்டுள்ளது. அதேபோன்று இம்முறை தேர்தலில் புதிய சின்னத்தை அறிமுகப்படுத்துவோம். நான் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்- என்றார். (ச-இ)

## சுகாதாரச் சீர்கேடு வெதுப்பகத்துக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொக்குவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கிய வெதுப்பகம் நீதிமன்ற உத்தரவுக்கமைய 'சீல்' வைத்து மூடப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினரால் தொடர்ச்சியாக, உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழாமினால் நல்லூரில் 9 வெதுப்பகங்கள் அண்மையில் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கொக்குவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய 2 வெதுப்பகங்கள் இனங்காணப்பட்டு, கொக்குவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் ஒரு வெதுப்பகத்தை சீல் வைத்து மூடுமாறும், மற்றைய வெதுப்பகத்துக்கான திருத்த வேலைகளை உடன் மேற்கொள்ளுமாறும் பணித்து வழக்குகளை ஒத்திவைத்துள்ளார். (ப-26)

## இராஜாங்க அமைச்சராக வியாழேந்திரன் நியமனம்

கொழும்பு, ஜூன் 26

நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனி ஆயுத வேட்டை: பொலிஸ் களமிறக்கம்

கொழும்பு, ஜூன் 26

நீதித்துறை நடவடிக்கைமூலம் அடையாளம் காணப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரர்களில் தொண்ணூற்றொரு வீதமானவர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில் தற்போது மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டறியும் நடவடிக்கையை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்காக அரச புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் விசேட பணியகம், பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பன களமிறக்கப்பட்டுள்ளன.

நீதி நடவடிக்கைக்காக பாதாள உலகச் செயற்பாட்டாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பாதாள உலக அமைப்பினருக்குச் சொந்தமான ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை ஜூலை முதல் வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முப்படையினரின் உதவியுடன் பாதாள உலகக் குழுவை ஒழிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மஹிந்த சிந்தனையை ஏற்பவரே ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்

## பெரமுன தீர்மானம்

கொழும்பு, ஜூன் 26

மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை ஏற்கக்கூடிய நபருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக்கட்சியின்நிறைவேற்றுக் குழு, அரசியல் குழு மற்றும் அகில இலங்கை காரியக்குழு என்பன நேற்று கூடின. இதன்போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மௌனம் காத்ததுபோதும், மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்ட வேட்பாளருக்கே ஆதரவு வழங்கவேண்டும் என என்னால் முன்வைக்கப்பட்ட யோசனை நிறைவேற்றப்பட்டது. முதலாவது, மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட எமது கட்சிக்கென கொள்கை இருக்கிறது. அதனுடன் இணங்கும் நபராக இருக்கவேண்டும். இரண்டாவது வெற்றி பெறக் கூடிய வேட்பாளராக இருக்க வேண்டும். மூன்றாவது எமது கட்சியின் அரசியல் அடையாளம் மற்றும் தனித்துவத்தை மதிக்கும் நபராக இருக்க வேண்டும். இந்த மூன்று விடயங்களை யும் கொண்ட வேட்பாளருக்கே ஆதரவு - என்றார். (எ-25-44)



## அதிக ஞாபகத்திறன்

# 3 வயதுச் சிறுவன் உலக சாதனை

கொழும்பு, ஜூன் 26

கம்பஹாவைச் சேர்ந்த 3 வயதான மொஹமட் ஷம்லான் எனும் சிறுவன் உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் நடத்திய உலக சாதனை படைக்கும் முயற்சியில் இவர் சாதனை படைத்துள்ளார்.

குறித்த சிறுவன் எண்கள், பூக்கள், பழங்கள், பறவைகள், விலங்குகள், தானியங்கள், மரக்கறி வகைகள், மனித உடலின் உள் உறுப்புகள், ஊர்வன, பூச்சிகள், பூக்கள், மீன்கள், சிங்கள, ஆங்கில, அரேபிய மொழி எழுத்துகள், அரசியல் தலைவர்கள், பல்வேறு தொழில்கள், உலகப் புகழ்பெற்ற கோபுரங்கள், புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள், தேசிய வீரர்கள், உணவு வகைகள் மற்றும் வீட்டுப் பாவனை பொருள்கள் என 1098 உருவ படங்களை அடையாளம் காட்டி அவற்றின் பெயர்களை எடுத்துக்கூறியுள்ளார்.

இதன்மூலம் 3 வயதில் உலகின் அதிக ஞாபகத்திறன் கொண்ட குழந்தை என்ற பெருமையை ஈட்டியுள்ளார். (ச-இ)

# பாகிஸ்தான் பொதியில் 'ஐஸ்' போதை மீட்பு

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொதியொன்றிலிருந்து 4 கிலோ ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் இந்தச் சந்தேகத்துக்கிடமான பொதி கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அதன் பெறுமதி சுமார் 400 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பொன்சேகா வெளியேறுவதால் ஐ.ம.சக்திக்கு நட்டமேதுமில்லை

## கட்சியின் செயலாளர் கூறுகின்றார்

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வெளியேறுவதால் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவ்வித தாக்கமும் ஏற்படப்போவதில்லை. மாறாக வாக்கு வங்கி அதிகரிக்கும் என்று அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டதால்தான் பொன்சேகாவுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகளை கம்பஹா மாவட்டத்தில் பெறமுடிந்தது. கட்சியை விட்டு அவர் தனித்து களமிறங்கினால் அவருக்கு வாக்குகள் கிடைக்கப்போவதில்லை. அதேவேளை, ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் கூட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அரசுடன் இணையப்போவதில்லை. இது உறுதி. சஜித், ரணில் சங்கமும் சாத்தியமற்றதாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-25-44)



# புதினம் தெரியுமோ?

உயிரோட இருக்கேக்கையே சமாதி கட்டுற ஆக்கள் இப்ப கூடிப்போட்டினம். அதுவும் உந்தப் பேஸ்புக், வட்ஸப் எண்ட கோதாரியள் வந்தபிறகு உந்த விசயங்களுக்கு அளவுகணக்கில்லாமல் போட்டுது. லைக்ஸ் வாங்கிறதுக்காக எல்லாத்தையும் கண்ணை மூடிக்கொண்டு தங்கட பேஸ்புக்கில போடுற ஆக்களால, நடக்காத விசயத்தைக்கூட 'ஒருவேளை நடந்திருக்குமோ?' எண்டு யோசிக்கிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது. முந்தநாள் அப்துல் ஹமீத் செத்திட்டார் எண்டதும் இப்பிடி பேஸ்புக்கில லைக்ஸ் வாங்கிறதுக்காக ஒரு கும்பல் கட்டிவிட்ட கதைதான்.

அப்துல் ஹமீத் ஒரு முஸ்லிமா இருந்தாலும்கூட, தமிழ் அறிவிப்புக்கு பேர்போனவர். தமிழ்ச் சொல்லுகளை எந்த உச்சரிப்புப் பிழையுமில்லாமல் அப்பிடியே ஆற்றொழுக்கு மாதிரி சொல்லக் கூடியவர். அதால அவரின்ர அறிவிப்புப் புகழ் உலகம் முழுக்கப் பரவியிருக்கு. இந்தியாவில கமல்கூட தன்ர தெனாலி படத்தில தனக்கு இலங்கைத் தமிழ் உச்சரிப்புக்கு அப்துல் ஹமீத்திட்டத்தான் ட்ரெய்னிங் எடுத்தவரெண்டால் பாருங்கோவன். எண்டாலும் கமலுக்கு யாழ்ப்பாணத் தமிழெண்டு ஏதோ இழுவைக்கதையொண்டைச் சொல்லிக்குடுத்திட்டார் எண்டு எங்கட சனம் இன்னும் திட்டிக் கொண்டுதான் இருக்குது. இருந்தாலும் செந்தமிழில கணீரென்ற உச்சரிப்புக்கு அப்துல் ஹமீத்தை அடிக்கிறதுக்கு ஆளேயில்லை. அப்பிடிப்பட்ட அப்துல் ஹமீத் செத்திட்டார் எண்டு முந்தநாள் காலமையில இருந்தே ஒரு நியூஸ் சுத்தத் தொடங்கிட்டுது. உடனேயே சில மீடியாக் காரர் அப்துல் ஹமீத்துக்கே போன் அடிச்சு விசாரிச்சுப்போட்டு 'அவருக்கு ஒண்டுமில்லை, நல்ல சுகமாத்தான் இருக்கிறார்' எண்டு அறிவிச்சினம். ஆனால் அம்மண ஊரில கோமணம் கட்டினவன் பைத்தியக்காரன் எண்டமாதிரி, அவையின்ர உண்மை எடுபடவேயில்லை. அதைவிடப் பகிடி என்னெண்டால், 'அப்துல் ஹமீத் உயிரோட இருக்கிறார் எண்டதுக்கு என்ன ஆதாரம்?' எண்டு அவையிட்ட எதிர்க்கேள்வி கேட்டவைதான் கூடவாம். அவர் செத்திட்டார் எண்டதை ஆதாரமே இல்லாமல் பேஸ்புக்கில போட்டவை, அவர் உயிரோட இருக்கிறதுக்கு ஆதாரம் தந்தால்தான் தாங்கள் முதல் போட்ட பதிவை (ஹமீத் செத்திட்டார் எண்டதை) தூக்குவம் எண்டு புறியம் விட்டிருக்கினம்.

கடைசியில அப்துல் ஹமீத்தைப் போய் சிலர் சந்திச்சு, அதைப் போட்டோ எடுத்துப் போட்ட பிறகுதான் பேஸ்புக்கில சுத்தித் திரிஞ்ச வதந்திக்கு ஒரு முடிவு வந்ததாம். இனிமேல் எல்லாரும் நாங்கள் உயிரோட இருக்கிறம் எண்டதுக்கு ஏதாவது ஒரு ஆதாரத்தை எப்பவும் கையோட வைச்சிருக்கிறது தான் நல்லது போல. இல்லாட்டி நாங்களே போய் 'உயிரோடதான் இருக்கிறம்' எண்டு சத்தியம் பண்ணினால்கூட ஒருத்தரும் நம்பமாட்டினம் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரிக்கும். சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும். விநாயகரை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி




ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் 8 ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியா அணியை 24 ஓட்டங்களால் வெற்றிகொண்டது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. ரோஹித் சர்மா 41 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பெற்றார். சூரியகுமார் யாதவ் 16 பந்துகளில் 31 ஓட்டங்களையும், சிவம் டுபே 22 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

டிராவிஸ் ஹெட் 43 பந்துகளில் 76 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஸ் 28 பந்துகளில் 37 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 12 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர். (எ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 11, நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள குருபூசையில், மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து, சைவப்புலவர், பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ப)

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

யாழ்ப்பாணம், ஜூன் 26

நீர்வேலி, அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவை, "ஆன்மீகம் தரும் நல் வாழ்வு" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர், பிரசங்க சக்கரவர்த்தி செ.கந்த.சத்தியதாசன் ஆற்றவுள்ளார். (ப)

## 'கலைஞானச் சுடர்' விருது; விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களிடமிருந்து, இந்த வருடத்துக்கான "கலைஞானச் சுடர்" விருதுக்கான விண்ணப்பங்கள், நல்லூர் பிரதேச செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.

விருதுக்கான விண்ணப்பங்களைப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும், விண்ணப்பத்துக்கான முடிவு திகதி ஜூலை மாதம் 8 ஆம் திகதி எனவும் நல்லூர்ப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ப)

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழாவின்போது விநாயகப் பெருமான் அலங்கார முத்துச் சப்பரத்தில் திருவீதியுலா வந்து அடியார்களுக்கு காட்சியளித்தார். (ச–17)



## 'சத்சங்கம்' நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென் கயிலை சமாதான ஆலய யாழ்.கிளையின் ஐந்தாம் ஆண்டு ஆரம்ப விழாவை முன்னிட்டு சிறப்பு 'சத்சங்கம்' நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் திருநெல்வேலி சிவகாமி மஹாலில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சற்குணராசா பங்கேற்கவுள்ளார். நிகழ்வில் உலக அமைதி தூதுவர் குருமகான் சிறப்புரையாற்றவுள்ளார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பிரதேச இலக்கியப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பிரதேச மாணவர்களுக்கான சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கான ஆங்கில மொழி மூல கவிதை கூறல், கையெழுத்துப் போட்டிகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (ச-9)



முஸ்லிம் ஹாண்ட் சிறிலங்கா அமைப்பின் ஒழுங்கமைப்பில், இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயத்தின் அனுசரணையில், மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பகீம் முல் அசீஸ் பங்குபற்றுதலுடன் முசலிப் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள மரிச்சுக்கட்டி பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ப-56)



## விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26

உள ஆரோக்கியம், திறன் விருத்தி விளையாட்டுகள், பற்சுகாதாரம், நேரிய சிந்தனை மற்றும் கிரகித்தல் பயிற்சி முதலான விடயங்களை உள்ளடக்கி, சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத் தொற்று நோயியல் மையம் மற்றும் குடும்பநலச் சுகாதார நிலையத்தினர் முன்னெடுத்த, மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு, மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-66)



## தேவிபுரம் பாடசாலைக்கு புதியகூரை மாற்றம்

முல்லைத்தீவு, ஜூன் 26

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பாடசாலைக் கூரையின் மரங்கள் மாற்றப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டின் பின்னர், இந்தப் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு வகுப்பறை ஒன்றின் கூரையின் மரங்கள் சேதமடைந்து காணப்பட்டன. மாணவர்களின் பெற்றோரால், தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையால் ரூபா 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கூரையின் புதிய மரங்கள் மாற்றப்பட்டுள்ளன. (ப-13)



## முரசுமோட்டை முருகானந்தாவில் புதிய அதிபர் பதவியேற்பு

கிளிநொச்சி, ஜூன் 26

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் முதல்வராக, அரசரத்தினம் பங்கையற்செல்வன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது பணிகளைப் பொறுப்பேற்றார்.

1992 ஆம் ஆண்டு முதல் ஆசிரிய நியமனம் பெற்று திருவையாறு மகா வித்தியாலயத்தில் பணிகளை தொடங்கினார். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி,வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபராக 8 ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் தற்போது முருகானந்தாக் கல்லூரியில் அதிபராக பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ப-13)





வடமாகாண பெரெண்டினா நுண் முதலீட்டு நிறுவனம் ஏற்பாடு செய்த, வவுனியா ஏ-9 வீதியில் சுற்றுச்சூழல் மற்றும் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல் தொடர்பான சமூக விழிப்புணர்வு சிரமதான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ப)

## நிறுவுநர் நினைவு நாளில் புதிய அதிபர் பதவியேற்பு

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியின் புதிய அதிபராக, கல்லூரியின் பழைய மாணவன் இராஜரட்ணம் புஸ்பரட்ணம், மகாஜனக் கல்லூரி நிறுவுநர் பாவலர் துரையப்பாபிள்ளையின் நினைவுதினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பதவியேற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற, நிறுவுநர் நினைவுதினத்துக்கும் பரிசளிப்புவிழாவுக்கும் அவர் தலைமை தாங்கியுள்ளார். (ப-66)





ஓமந்தைப் பிரதேசத்தில் மருதோடை கிராம மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மருதோடை கந்தசாமி கோவில் ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சங்காபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைவலைத் தொழிலால் இழக்கப்படும் வாழ்வாதாரம்

## நன்னீர் மீனவர்கள் கவலை

**கிளிநொச்சி, ஜூன் 26**

**கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தில் தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளை பயன்படுத்தி சிலர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருகின்றமையால் நன்னீர் மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தில் சுமார் 50 மீனவர்கள் வரையில் தடைசெய்யப்பட்ட இழுவைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீரியல் வளத் திணைக்களம் தடைசெய்யப்பட்ட குறித்த தொழிலை மேற்கொள்ளவேண்டாம் என அறிவித்துள்ளபோதும் அதனையும் பொருட்படுத்தாது அவர்கள் தொடர்ந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபடுகின்றனர். இரணைமடுக் குளத்தை நம்பி 152 குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத் தொழிலாக நன்னீர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். எனவே தடைசெய்யப்பட்ட தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கையை பிரயோகிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-214)

## மடு பிரதேச விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

மன்னார், ஜூன் 26

மடு பிரதேசசெயலாளர் பிரிவில் வசிக்கும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என மடு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

மடு பிரதேச செயலகத்தால் விரைவில் நடத்தப்படவுள்ள பிரதேச பண்பாட்டு விழாவில், கலைஞர்கள் மற்றும் இலக்கியவாதிகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனால், இலக்கியத்துறை மற்றும் வாத்தியக் கலை, கூத்து, கிராமியக்கலைகள், ஒப்பனைத்துறை போன்ற விருதுகளுக்காக கலைஞர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்றும்விருது வழங்கலுக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகத்தில் கலாசாரப் பிரிவிலும், தத்தமது பகுதிக் கிராம சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும் பெற்று, ஜூலை மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் கௌரவிப்பு 40 வயதுக்கு கீழ் மற்றும் 41 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என மூன்று வயதுப்பிரிவினரை உள்ளடக்கியதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-60,213)

## 'யாழ்ப்பாணம்' மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படும் 'யாழ்ப்பாணம்' மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

'ஈழத்தின் வரலாற்றின் முன்னும் பின்னும்' எனும் தொனிப்பொருளில் (மொழி,பண்பாடு,கலைகள்) ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் bookjaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## கலைஞர்களிடம் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென்மராட்சிப் பிரதேச கலாசார அலகால் இந்த ஆண்டுக்கான பிரதேச கலைஞர்களுக்கான விருதுகளான கலைச்சாகரம், இளங்கலைஞர் விருதுகளுக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய கலைஞர்கள் பிரதேச கலாசார அலகில்விண்ணப்பங்களை பெற்று ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

'இளங்கலைஞர்' விருதுக்கு 40 வயதுக்குட்பட்டோரும், 'கலைசாகரம்' விருதுக்கு 50 வயதுக்கு மேற்பட்டோரும் விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



## மயங்கி வீழ்ந்து முதியவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த முதியவர் ஒருவர் வீதியில் மயங்கி வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகத்துக்கு அண்மையில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உடுவில் பகுதியைச் சேர்ந்த முதியவரொருவரே காயமடைந்துள்ளார். (ச-125,66)

## மணிவிழா வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜூன் 26

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் உப அதிபர் திருமதி செல்வராணி சின்னத்துரைக்கான மணிவிழா வாழ்த்து, பாடசாலை மண்டபத்தில், அதிபர் க.இளங்கோவன் தலைமையில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

## சந்நிதியில் பொங்கல்



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த ஆனிப்பொங்கல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-26)

## காணி உறுதி வழங்குவதில் பாகுபாட்டைத் தவிருங்கள்

### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் காலங்காலமாக வசித்துவரும் மக்களுக்கான காணி உறுதிகளை வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை தவிர்த்து பாகுபாடற்ற முறையில் அனைத்து மக்களுக்கும் காணி உறுதிகளை உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வாறு முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம் தொடர்பில் கடந்த 21ஆம் திகதிய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியின் முதலாவது குடியேற்றக் கிராமமாக 1930இல் கணேசபுரம் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. வட்டக்கச்சி படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம், உருத்திரபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம், இராமநாதபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம் மற்றும் பூநகரி, முழங்காவில் உள்ளிட்ட குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கம் பெற்றிருந்தன.

பரம்பரை பரம்பரையாகவும் ஆட்சியுரிமை ரீதியாகவும் மூன்று தலைமுறைகளாக வாழ்ந்துவரும் காணிகளுக்கான உரித்தை உறுதிசெய்யக்கூடிய காணி உறுதிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

குறிப்பாக, கிளிநொச்சியின் நகர சபை எல்லையாக குறித்துரைக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள உதயநகர், கணேசபுரம், கிளிநொச்சி நகரம், இரத்தினபுரம், திருவையாறு கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலான குடியிருப்பாளர்களுக்கும் இதுவரை காணி உறுதிகள் வழங்கப்படவில்லை.

தற்போது உறுதிகளை வழங்குவதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகள் அமைச்சு மற்றும் திணைக்கள மட்டங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சாதாரண நடைமுறைகளுக்கு உட்பட்டு உறுதிகளை வழங்கமுடியாதெனவும், அவர்கள் தமது சொந்தக் காணிகளை பெருந்தொகைப்பணம்செலுத்தி நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலேயே பெறமுடியும் எனவும் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

இந்த நடைமுறை, அவர்களின் அடிப்படை இருப்பையே நசுக்கக்கூடிய செயற்பாடாகும்.

எனவே, கிளிநொச்சி மாவட்ட மக்கள் காணி உறுதிகளை பெறுவதில் உத்தியோகத்தர்கள், சாதாரண பொதுமக்கள் என்ற பாகுபாடுகளற்று அனைத்து மக்களுக்கும் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-113,26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பூமராங்காக மாறிய அரச அலட்சியம்

எல்லைதாண்டிய தமிழக மீனவர்களின் தாக்குதலில் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்திருக்கின்றார். தமிழக மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடிப் பிரச்சினையை இந்திய-இலங்கை அரசாங்கங்கள் அரசியல் ஆதாயத்தோடு கையாண்டதன் விளைவு இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் உயிரைக் காவு கொள்ளுமளவுக்கு இந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் நிகழ்ந்து வரும் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை - இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அதிகரித்திருக்கின்றது. தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையால் வடக்கு மீனவர்களின்வாழ்வாதாரம்பாதிக்கப்படுவதுடன், பெரும் சொத்தழிவுகளையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றபோதும், இந்த விடயத்தில் இலங்கை-இந்திய அரசாங்கங்கள் மெத்தனப்போக்கையே கைக்கொள்கின்றன.

இந்தச் சிக்கலை இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான உறவை அறுத்தெறியும் ஆயுதமாகக் கையாள்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வை நோக்கி நகர மறுக்கும் இலங்கை-இந்திய அரசாங்கங்கள், இந்தப் பிரச்சி னையை நீறுபூத்த நெருப்பாக வைத்திருந்து தங்கள் நோக்கத்தைநிறைவேற்ற முயற்சிக்கின்றன. எல்லைதாண்டிய மீன்பிடி என்ற பிரச்சினைக்குத் தீர்வைக்கோரிய போராட்டங்கள் - குற்றச்சாட்டுகள் ஆரம்பகாலங்களில் இலங்கை அரசாங்கத்தை நோக்கியதாக இருந்தமையும், தற்போது அவை இந்திய - தமிழகம் நோக்கித் திரும்பியுள்ளமையும் இலங்கை அரசாங்கங்கள் தங்கள் முயற்சியில் வெற்றியீட்டிருக்கின்றன என்பதையே புலப்படுத்துகின்றது. இந்திய மத்திய அரசாங்கமும் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான முழுமுயற்சியில் இல்லை. இந்தப் பிரச்சினை ஊடாக தமிழகமும், இலங்கைத் தமிழரும் முரண்பட்டுக்கொண்டிருப்பதையே இந்திய மத்திய அரசும் விரும்புகின்றது.

இரு நாட்டு அரசாங்கங்களினதும் 'மோத விட்டுக் கூத்துப் பார்க்கும்' போக்கு, இப்போது எதிர்பாராத விபரீதத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இலங்கையின் சுயமரியாதை, இறைமை மீது கைவைத்திருக்கின்றது. கடல் ரோந்துப் பணியில் இருந்த இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தமிழக மீனவர்களின் தாக்குதலில் இறந்திருக்கின்றார். நாட்டில் உள்ள அனைவரும் தங்கள் குடிமக்களே என்ற எண்ணம் இன்றி, தமிழர்களுக்குத்தானே பாதிப்பு என்ற தெற்கின் அசமந்தமே இப்போது 'பூமராங்' போன்று இலங்கையின் கடற்படையைத் தாக்கி, ஒரு உயிரையும் குடித்துள்ளது. இப்போதுநாட்டின்சுயமரியாதையையும், இறமையையும் இந்த அலட்சியப் போக்கே கேள்விக்குட்படுத்தியுமுள்ளது. இனியாவது இந்தப் பிரச்சினையை இதயசுத்தியுடன் அணுகி தீர்வுகாண இலங்கை முயலவில்லையானால் இதைவிடவும் பெரும் விபரீதங்களை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும் என்பதே உண்மை.



# வளர்ச்சியுறும் பொருளாதாரம்

## மத்தியவங்கி தகவல்

**கொழும்பு, ஜூன் 26**

**நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர் இப்போது நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது என்று மத்தியவங்கி ஆளுநர் நந்தலால் வீரசேகர தெரிவித்துள்ளார்.**



குறுகியகால பொருளாதார ஸ்திரத்தன்மையை நாடு தற்போது எட்டியுள்ளது. கடன் மறுசீரமைப்பு பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. வருங்காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4 முதல் 5 வீதத்தை எட்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

## விவசாயிகளுக்கு இலவச உரம்

கொழும்பு, ஜூன் 26

அனைத்து விவசாயிகளுக்கும் இலவச உரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் இரு போகங்களுக்கும் உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

55 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது. உர விநியோகம் போன்ற நடவடிக்கைகளுக்காக சுமார் ஒன்றரை பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது என்றும் விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 26

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட கொடுப்பனவு இவ்வாரம் முதல் நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை 2,500 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இந்தவாரம் முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சுகாதாரத்துறைக்கு 150 மில்லியன் டொலர்

இலங்கையின் சுகாதாரத்துறையை வலுவூட்ட 150 மில்லியன் டொலரை நிதியுதவியாக உலகவங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர்சபை இணங்கியுள்ளது.

இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையின் மேம்பாட்டுக்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியுதவியின் மூலம் மக்களை மையப்படுத்தியதும், உடன் செயலாற்றக்கூடியதுமான சுகாதார சேவையின் முன்னோக்கிய நகர்வை உறுதி செய்யமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# உரிய பரிசோதனையின்றிய '8' மருந்துகள் பாவனையில்

கொழும்பு, ஜூன் 26

உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட எட்டு மருந்துகள், உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமலே பாவனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான, தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

டயஸெபம், கெட்டமைன் HCl (200 mg/20 ml), கெட்டமைன் HCl (500 mg/10 ml), எபெட்ரின் HCl, ட்ரானெக்ஸாமிக் அமிலம், ஃபெனிடோயின் சோடியம், தயாமின் HCl மற்றும் வெராபமில் HCl.

(diazepam, ketamine HCl (200 mg/20 ml), ketamine HCl (500 mg/10 ml), ephedrine HCl, tranexamic acid, phenytoin sodium, thiamine HCl, and verapamil HCl.) ஆகிய மருந்து வகைகளே உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமல் பாவனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ப-6)

**நாளை**

27.06.2024

**வியாழக்கிழமை**

**ஆனி - 13**

சுபநேரம் : 07.25 - 08.55

ராகுகாலம் : 01.25 - 02.55

**நாளொரு நல்வார்த்தை**

**மனிதனை மனிதனாக்குவது உதவிகளும், வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களும்தான்.**

**- மத்யூஸ் -**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





கோப்பாய்ப் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும், கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய்ப் பிரதேச செயலரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் அண்மையில் நடைபெற்றன. (ப-66)

# புத்தக அரங்கவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 26

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபதாவது நிகழ்வு, சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 28, 29, 30 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள விழாவின் தொடக்க நிகழ்வான 'ஈழத்து நூல்களை அறிவோம்'என்ற தலைப்பிலான நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடல் நிகழ்வு, ஈழத்தின் தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களுள் ஒருவரும், ஆய்வாளரும், நாடக ஆசிரியரும், மொழிபெயர்ப்பாளருமான இ.முருகையனின் 15 ஆவது ஆண்டு நினைவையொட்டி அவரது நினைவு அரங்கில், ஓய்வுநிலை அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை, ஆய்வாளர் சி.நிசாகரன், ஓய்வுநிலை ஆசிரியர் ச.மார்க்கண்டு, ஆய்வாளர் ச.சத்தியதேவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், நிகழ்வின் விசேட அம்சமான மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. முற்றிலும் இலவசமாக இடம்பெறும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ப)

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் துடுப்பாட்டத் தொடர் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 26



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு துடுப்பாட்டப் போட்டித் தொடர் இளவாலையில் வார இறுதி அல்லது விடுமுறை நாள்களில் இடம்பெறவுள்ளது.

அணிக்கு 9 வீரர்கள், 6 பந்துப் பரிமாற்றங்கள் என்ற வகையில் போட்டிகள் அனைத்தும் நடைபெறவுள்ளன. பங்கு கொள்ள விரும்பும் அணிகள் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக 0775002732 அல்லது 0776087318 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் அணிகளைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும், மேலதிக விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (எ-25-66)

# கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 26

மன்னார் காற்றாலை மின் திட்டம் மற்றும் கனியவள மண்ணகழ்வு உட்பட மன்னார் தீவில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல், மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், கறிற்றாஸ் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன பணியாளர்கள், மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சட்டவிரோத காணி அபகரிப்பு மற்றும் சுற்றாடல் தாக்கமதிப்பீட்டுஅறிக்கை, விடத்தல் தீவின் 400 ஏக்கர் நில விடுவிப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட அரச சுற்று நிருபம் சிங்கள மொழியில் அமைந்துள்ளதோடு பிரதேச மக்களுக்கு இது தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப் படவில்லை போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (எ-25-60)

சித்திரவதை கொடூரம்

# 3 பொலிஸாருக்கு 7 வருட கடூழியம்



யாழ்ப்பாணம், ஜூன் 26

முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாத்தறை சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தால் ஏழு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட 5 இளைஞர்கள் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முடிவில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு, சட்ட மா அதிபர், இந்த மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கொடூரமான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



ரெலோ அமைப்பின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் திருவுருவச் சிலை, வவுனியா நகர மத்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. கட்சியின் தற்போதைய தலைவர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் மற்றும் கட்சியினுடைய உப தலைவர் கென்றி மகேந்திரன் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-18)



கடலன்னை தாலாட்டும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் சிறப்பான முறையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் ஆன்மீக சமூக சேவையாற்றி வரும் இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினருக்கு 75 சால்வைகளும், இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் மகளிர் அணியினருக்கு சாறிகளும், ஆலய நிர்வாகத்தினரால் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ப-159)

# புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 26



பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தின்போது, கூட்டுறவுச் சங்கத்துக்கான புதிய இயக்குநர் சபை, கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் இரண்டு குழுக்களிடையே கடும் போட்டி நிலவியது. இதனையடுத்து இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஒரு பெயர் கொண்ட புதிய இயக்குநர் சபை தெரிவுசெய்யப்பட்டது. இந்தச் சபையின் தலைவராக மு.கெ.சுஜிந்திரன், உபதலைவராக பா.வின்சன், இயக்குநர்களாக ச.தவநேசன், சே.மன்மதராஜசிங்கம், அ.பற்றிக் பிரியந்தா, ஆ.விமலினி, ச.லோகசிவம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைத் தேடி
ஓடுங்கள்
நாளைய வரலாறு
உங்கள் நிழலாக
தேடி ஓடிவரும்

அம்பேத்கர்

புதன் பொய்கை

26.06.2024
புதன்கிழமை

# இலங்கையில் தீர்ந்திடாத யானை - மனித மோதல்!



■ ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

உலகில் யானை - மனித மோதலில் முதலிடத்தில் வகிக்கும் நாடாக இலங்கை காணப்படுகிறது. இதன் காரணமாக வருடமொன்றுக்கு சராசரியாக 250 யானைகளும் 70 பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர் என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. யானை - மனித மோதலுக்கு தீர்வு காண்பதில் இலங்கையில் இன்னும் முழுமையான வெற்றியைப் பதிவுசெய்யமுடியவில்லை. காலத்திற்கேற்ற வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கமும் தோல்வி கண்டுள்ளது. யானை - மனித மோதலால் அதிகளவான யானைகள் மற்றும் மனிதர்களின் உயிர்கள் பலியாகிய ஆண்டாக 2022ஆம் ஆண்டு காணப்படுவதாக இலங்கை வனஉயிரிகள் திணைக்களத்தின் அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி 2022ஆம் ஆண்டு இலங்கையில் பலியாகிய யானைகளின் எண்ணிக்கை 439 மற்றும் மனித உயிரிழப்புகள் 148 ஆகவும் பதிவாகியுள்ளது.



யானை - மனித மோதல்களுக்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக மனிதர்களால் முன்னெடுக்கப்படுகின்ற முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைகின்றன. அரச மற்றும் தனியார்களால் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படுகின்ற காடழிப்புகளின் காரணமாக யானைகளின் வாழ்வியலில் ஏற்படுகின்ற மாறுதல்கள், பயன்படுத்தக்கூடிய வளமான வாழ்விடங்கள் இல்லாமல் போதல் அல்லது குறைவடைதல், காட்டு யானைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுதல் மற்றும் யானைகளின் நடைபாதைகளை தடை செய்தல் போன்ற காரணங்களினால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள், மனிதர்கள் வசிக்கும் இடங்களுக்கு பிரவேசிக்கின்றன. அதனால் யானை - மனித மோதல் வெகுவாக அதிகரித்துள்ளது. 2013 - 2017 வரையிலான காலப்பகுதியில் யானை - மனித மோதலினால் யானைகளின் மரணம் ஆயிரத்து 177 ஆகவும் மனித இறப்புகள் 375 ஆகவும், உடல் ரீதியான சேதங்கள் 357 ஆகவும் ஆதனங்களுக்கான சேதங்கள் 6 ஆயிரத்து 458 ஆகவும் பதிவாகியுள்ளன.

இலங்கையில் யானை - மனித மோதல் பிரதானமாக எட்டு மாகாணங்களில் 58 பிரதேச செயலகப் பிரிவுகளில் பரந்து காணப்படுகின்றன. இவற்றுள் அதிக மோதல் காணப்படும் பிரதேசமாக வெள்ளவாய, லுணுகம வெஹார, அம்பாறை, உருனை, போரத்தீவுப்பற்று, கோரளைப்பற்று தெற்கு, மகியங்கனை, தெஹி அத்தகண்டிய, வில்கமுவ, திம்புலாகல, வெலகந்த, தெகிராவ, பளுகஸ் வெள, தில்வெரட்டிய ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் வழங்கிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் 2018, 2019, 2023 ஆகிய வருடங்களில் சுமார் 61 யானைகளின் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. யானை-மனித மோதலில் யானைகளின் உயிரிழப்பு விகிதமே அதிகமாக உள்ளது. 'யானை-மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புகள் சம்பவிக்கும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது. யானை-மனித மோதலுக்கு தீர்வு காண்பதற்காக காலத்திற்கேற்ற வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ள நிலையில் பொதுமக்களின் ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை. யானைகளுக்காக பாதுகாப்பு வேலிகளை அமைக்கும்போது தமது காணிகளில் எல்லைகள் இழக்கப்படும் என சில பகுதிகளில் மக்கள் காண்பிக்கும் எதிர்ப்புகளால் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதுள்ளது' என அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### கொல்லப்படும் யானைகள்

மக்களது அறியாமை மற்றும் விழிப்புணர்வற்ற தன்மைகளால் தேசியத்தின் அரும்பெரும் யானைகளை இலங்கை இழந்து கொண்டிருக்கிறது. யானைகள் பிரதேசங்களில் ஊடுருவும் சந்தர்ப்பங்களில் மக்கள் தவறான வழிமுறைகளைக் கையாள்கின்றனர். பழங்களில் நஞ்சுப் பொருள்களை வைத்தல், யானைகளுக்குத் தீ வைத்தல், துப்பாக்கியால் யானைகளை சுடுதல் போன்ற தவறான செயற்பாடுகளால் இறக்கும் யானைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதை தற்காலத்தில் அவதானிக்கமுடிகிறது. யானைகளின் இறப்பினைக் குறைப்பதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் அவற்றை முறையாக அமுல்படுத்தாமை காரணமாக யானைகளின் உயிரிழப்புகளை குறைப்பது இன்று வரையும் முடியாமல் உள்ளமை வெளிப்படையான உண்மையாகும். இதனால் யானைகள் மற்றும் மனிதர்களின் உயிரிழப்புகள் தொடர்ச்சியாக காணப்படுகிறது. எனவே மனிதர்களையும் யானைகளையும் காப்பதற்கும், சொத்துகளை பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் யானைகளின் தாக்குதலினால் சம்பவிக்கும் உயிரிழப்புகள் அதிகமாக உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 24 உயிரிழப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அண்மைக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் [illegible] மற்றும் சம்பூர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக யானைத் தாக்குதலுக்குள்ளாகி மூவர் உயிரிழந்துள்ளனர். யானைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ரூபாய் 100,000 நிதியுதவி வழங்கப்படுகின்ற போதிலும் அப்பணம் மனித உயிருக்கு ஈடாகுமா? என்ற கேள்வி பாதிக்கப்பட்ட குடும்பத்தாரால் அரசு தரப்புக்கு எழுப்பப்படுகிறது. குடும்பத் தலைவர்கள் மாத்திரம் உழைக்கும் பட்சத்தில் தற்போது அவர்களையும் பறிகொடுத்து விட்டு தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது மிகுந்த சவாலான விடயமாகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதார பயிர்களான தென்னை, வாழை, கரும்பு முதலான பயிர்களையும் யானைகள் அழிவடையச் செய்கின்றன. இதற்கான இழப்பீடு என்பது விரைவாக அரசு வழங்குவதில்லை என்பது பாதிக்கப்பட்ட மக்களால் குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுகிறது. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் இங்கு கேள்விக்குறியாகவுள்ளது.

யானைகளின் தாக்குதல்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு யானைத் தடுப்பு வேலிகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகும். இது காடுகளை அண்மித்துள்ள கிராமங்களுக்கு மிகவும் கட்டாயமாகிறது. எனினும் மின்சார வேலிகள் பல யானைகளின் உயிரிழப்புகளுக்கு காரணமாவதோடு செலவுமிக்க செயற்பாடாகவும் இருக்கின்றது. மேலும் மின்சாரவேலிகள் விரைவாக ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசு தரப்பு தாமதமாகச் செயற்படுவதால் பொதுமக்கள் தமது விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தமது சொந்தச் செலவில் மின்சார வேலிகளை அமைப்பதாக திருகோணமலை பிரதேச மக்கள் கூறுகின்றனர். மின்சார வேலிகளை அமைக்கும் பணியில் அரசு பக்க சார்பாகச் செயற்படும் போக்கு உள்ளதாக மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனால் இயற்கை முறையிலான யானைத் தடுப்பு வேலிகளை அமைக்கும் பணியில் மக்கள் ஈடுபடுகின்றனர். அதாவது எல்லைப்புறங்களில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வதன் மூலமும் குறிப்பிட்ட தூர இடைவெளியில் பனை மரங்களை நடுவதன் மூலமும் யானைகளிடமிருந்து மிகக்குறைவான செலவில் மக்களை பாதுகாத்துக் கொள்ளலாம். இம்முறையின் ஊடாக இரட்டிப்புப் பயன்களை மக்கள் அடையக்கூடும் இம்முறையை கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச விவசாயிகள் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஒரு யானையை இழப்பதென்பது, ஒரு காட்டை இழப்பதற்கு சமம். ஒரு யானை தன் வாழ்நாளில் பதினெட்டு இலட்சம் மரங்களை உருவாக்குகின்றது. காடுகளை உருவாக்குவதில் யானைகளின் பங்கு அளப்பெரியது. யானைகளை பாதுகாப்பது என்பது ஒரு நாட்டினுடைய வளத்தை பாதுகாப்பதற்கு சமமானது. யானைகளின் கொலைகளையும் தடுத்து நிறுத்தவேண்டும் அதேவேளை மக்களின் சொத்துகள் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும். எனவே யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஒரு சக வாழ்வை கொண்டு வருவதே இங்கு கவனத்திற்குரிய விடயமாகும். யானைகளுக்கும் பாதிப்பின்றி மக்களுக்கும் பாதிப்பின்றி ஆரோக்கியமானதும் சாதகமானதுமான சூழல் உருவாக்கப்படவேண்டும் இதன் ஊடாகவே யானை - மனித மோதலைத் தடுக்கமுடியும். அந்த அடிப்படையில் சமூக மட்ட வேலி அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தல் இயற்கை முறையிலான யானை தடுப்பு வேலிகளை முன்னெடுப்பதன் ஊடாக யானைக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல்களுக்கான தீர்வுகளைக் காணமுடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் ரவிராஜ் இருந்திருந்தால் தமிழரசு நீதிமன்றுக்கு சென்றிராது!



■ பா.அரியநேத்திரன்
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

> தேசியத் தலைர் பிரபாகரனால் தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான 'மாமனிதர்' விருது வழங்கி ரவிராஜ் கௌரவப்படுத்தப்பட்டார். தேசியத்தலைவருடைய அந்த அறிக்கையில் "நடராஜா ரவிராஜ் ஓர் அற்புதமான மனிதர், அபூர்வமான குண இயல்புகளைக்கொண்டவர், பந்த பாசங்களுக்கு அடிமைப்பட்டு பொருள் உலகால் ஆட்டிப்படைக்கும் ஒரு பொம்மை மனிதரல்ல அவர் தமிழீழ மக்கள் மீதும், மண்மீதும் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர்" என அறிக்கையில் குறிப்பிட்டு மாமனிதர் மதிப்பை வழங்கி இருந்தார்.

ஒ மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட சதிச்செயலால் 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி மாமனிதர் நடராஜா ரவிராஜ் உயிருடன் இருந்திருந்தால், இன்று அவருக்கு 62 வயது. மாமனிதர் ரவிராஜ் இன்று இருந்திருந்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது மாநாட்டில் எந்த இடையூறுகளும், குத்து வெட்டுகளும் இல்லாமல் அவரே தலைவராகத் தெரிவாகியிருப்பார். தனது மக்களின் விடிவுக்காகத் தனது உயிரையே கொடுக்கத் தயாராக இருந்த ஒரு தலைவர் மத்தியில், இன்று தங்களுடைய சுய நலனுக்காக நடிப்பு அரசியல் செய்து வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொள்வோர் மாமனிதர் ரவிராஜின் அரசியல் பயணத்திலிருந்து பெறவேண்டிய பெறுமதியான படிப்பினைகளை உள்வாங்கத் தவறிவிட்டார்கள்.

அத்துடன், இன்று தமிழரசுக்கட்சியை நீதிமன்றில் நிறுத்திய நிலைமை மாமனிதர் உயிரோடு இருந்திருப்பின் ஏற்பட்டிருக்காது. தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாடுகள் உயிர்ப்புடன் ஒற்றுமையாக முன்நோக்கிச் சென்றிருக்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துகளும் இருந்திராது. ஏனெனில், அவர் தந்தை செல்வாவின் அகிம்சைப்போராட்ட அரசியலையும், தலைவர் பிரபாகரனின் ஆயுதப்போராட்ட அரசியலையும் ஒருசேர நேசித்தார். மாமனிதர் ரவிராஜிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ நேர்மையையோ எந்தத் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவர்களிடமோ நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். யாழ்ப்பாணம், தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் யாழ்ப்பாணம் டிறிபேர்க் கல்லூரி மற்றும் யாழ்.பரியோவான் கல்லூரிகளில் கல்வி கற்றார். அன்பு மனைவியாக சசிகலாவைத் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தந்தையாக வாழ்ந்தார். இவர் 1987ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். ரவிராஜின் 'ரவிராஜ் அசோசியேட்ஸ்' எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் பணியாற்றினார்.

## நெருக்கடியான நாள்கள்

2004ஆம் ஆண்டில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தோம். அதில் ரவிராஜ் அவர்களும் எம்முடன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையில் 2004ஆம் ஆண்டு தேர்தல் இடம்பெறுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்குள் பிளவு ஏற்பட்டு கருணா தலைமையில் சிலர் பிளவடைந்தனர். கிழக்கில் பிரதேசவாத அரசியலுடன் தமிழ்த்தேசிய அரசியலுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தமிழ் ஆயுதக் குழுக்களாக இவர்களை பயன்படுத்தி ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் படுகொலைகளும் இடம்பெற்றமையால் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியாமல் கொழும்பில் தங்கியிருந்தோம்.

அந்தவேளையில்தான் 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருகோணமலை மாவிலையாற்றில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சம்பூர் - மூதூர் பகுதி மக்கள் மட்டக்களப்பு வாகரையில் தஞ்சம் அடைந்திருந்தனர். 2006ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி வாகரையில் அகதி முகாம்களில் தங்கி இருந்த அப்பாவி பொதுமக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால் 35 பொதுமக்கள் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தும் இருந்தனர். மறுநாள் கொழும்பு நகரில் ஐ.நா. செயலகத்துக்கு முன்பாக, இராணுவம் மேற்கொண்ட அந்தத் தாக்குதலைக் கண்டித்து ஒரு கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினோம். அந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தவர் மாமனிதர் ரவிராஜ்தான்.

இந்தப் போராட்டம் இடம்பெற்று நாம் கலைந்து செல்லும்போது மாமனிதர் ரவிராஜ் என்னிடம், "மச்சான் நாளை நானும் நீயும் வாகரைக்குப் போவோம். எவரிடமும் கூறாமல் திடீரென வாகரைக்குச் சென்று அங்கு உயிர் இழந்த மக்களையும் காயப்பட்ட மக்களையும் நேரடியாகப் பார்த்து வருவோம். நான் நாளை காலை 9 மணிக்கு மாதிவெல விடுதிக்கு வருவேன். ஆயத்தமாக இரு எனது வாகனத்தை மட்டும் கொண்டு செல்வோம்" எனக் கூறினார். நானும் உடனே சம்மதித்து மறுநாள் வாகரை செல்வதற்காக தயாராக இருந்தேன். நவம்பர் மாதம் 10ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை 'தெரண' தொலைக்காட்சிக்கு மாமனிதர் ரவிராஜ் நேர்காணல் அளித்தார். அதுதான் அவரது இறுதி நேர்காணல். அதில் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு பிரச்சினை பற்றியும் தனது ஆணித்தரமான கருத்துகளை எடுத்துரைத்திருந்தார். அந்த நேர்காணலை முடித்துவிட்டு என்னை ஏற்றுவதற்காக ஜெயவர்த்தனபுர மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கு வரும்போதே 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் அவர்மீது கொலைகாரக் கும்பல்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது ரவிராஜ் சிகிச்சை பயனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார். பின்னர் மாமனிதர் ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து கொழும்பில் நவம்பர் மாதம் 13ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பல்லாயிரம் பேர் பங்கெடுத்தனர்.

## தேசியத் தலைவரின் மாமனிதர் கௌரவம்

தேசியத் தலைர் பிரபாகரனால் தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான 'மாமனிதர்' விருது வழங்கி ரவிராஜ் கௌரவப்படுத்தப்பட்டார். தேசியத்தலைவருடைய அந்த அறிக்கையில் 'நடராஜா ரவிராஜ் ஒரு அற்புதமான மனிதர், அபூர்வமான குண இயல்புகளைக்கொண்டவர், பந்த பாசங்களுக்கு அடிமைப்பட்டு பொருள் உலகால் ஆட்டிப்படைக்கும் ஒரு பொம்மை மனிதரல்ல அவர் தமிழீழ மக்கள் மீதும், மண்மீதும் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர்' என அறிக்கையில் குறிப்பிட்டு மாமனிதர் மதிப்பை வழங்கி இருந்தார்.

உண்மையில் துடிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினராக என்னுடன் பயணித்த காலத்தை மறுக்க முடியாது. தனக்கு வாக்களித்த யாழ்.மாவட்ட மக்களின் அபிலாசைகளை கருத்திற்கொண்டு இன ஒற்றுமையை மனதில் கொண்டு போராடிய ஒரு தலைவரே மாமனிதர் ரவிராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் தொன்மைமிகுந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்







தனம்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஈழத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பும் பழைமையும் மிக்க ஆலயங்களில் ஒன்றாகும். ஆனி மாத அமாவாசையில் ஆலயத்தின் கொடியேறி திருவிழா நடைபெறும். அந்த வகையில் இந்த வருடத் திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

**வரலாறு**

யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த திரிபுத்திர குமார் என்னும் சைவமணவாளரும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் வன்னிக்குச் சென்று குடியேறினர். அவர்களும் அவர்களின் சந்ததியினரும் வாழ்ந்த இடம் தற்போது ஒட்டுசுட்டானில் உள்ள இடைக்காடு என அழைக்கப்படுகிறது. திரிபுத்திரன் என்பவர் காடுவெட்டி குரக்கன் பயிரிட்டார். குரக்கன் விளைந்தவுடன் வெட்டி எடுத்தார்; குரக்கனின் ஒட்டுப்பகுதி காய்ந்தவுடன் ஒட்டுக்கு நெருப்புவைத்தார் நெருப்பு வைத்தபோது ஒரு கொன்றை மரத்தடியில் ஒட்டுகள் எரியாமல் இருப்பதைக்கண்டு அவ்விடத்தை துப்புரவு செய்வதற்கு மண்வெட்டியால் வெட்டியபோது ஒருகல்லில் மண்வெட்டி வெட்டியவுடன் அதில் இருந்து இரத்தம் வடிவதைக்கண்டார். இதன் மர்மத்தை அறியாத திரிபுத்திரன் அந்தப்பகுதியை ஆண்ட வன்னியானாரிடம் கூறினார். வன்னியானார் குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டு அவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபாடு செய்யுமாறுகூறினார். அதில் சிவலிங்கம் தானாகத் தோன்றியதால் தான்தோன்றீஸ்வரர் எனப் பெயரிடப்பட்டது. அத்துடன் எரியாத இடத்தில் தோன்றியதால் வேகாவனேஸ்வரர் என்றும் வேகாவனப் பெருமான் என்றும் காரணப் பெயர்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஒட்டுகளை நெருப்பு வைத்து அவ்விடம் எரியாதுள்ளதால் ஒட்டுசுட்டான் என அவ்விடம் அழைக்கப்பட்டது.

**சித்தர்களின் தேசம்**

ஒட்டுசுட்டான் அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்த இடத்தில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் அந்தப் பிரதேசத்துக்கு வந்தனர். இவர்களில் இருவர் தற்போது ஒட்டுசுட்டான் என அழைக்கப்படும் இடத்தில் பிரிந்து சென்றனர். முதலாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள வாவெட்டி மலையில் தியானத்திலிருந்து சமாதி அடைந்தார். இரண்டாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்கு தெற்கே உள்ள காதலியார் சமளங்குளத்தில் வாழ்ந்து அங்கேயே சமாதியடைந்தார். மூன்றாவது சித்தர் ஒட்டுசுட்டானில் ஒரு கொன்றை மரத்தடியின் கீழ் நிஷ்டையில் அமர்ந்து சமாதியடைந்தார். இவர் பூசித்த சிவலிங்கமும் சமாதியடைந்து பிற்காலத்தில் சிவலிங்கம் தோன்றியது எனக் கருதப்படுகிறது. குளக்கோட்டன் திருப்பணி மூன்றாவது கட்டமாகும். சின்னத்துரை ஓவசியரின் திருப்பணி நான்காவது கட்டமாகும். தற்போதைய ஆலய பரிபாலனசபை ஆற்றிய திருப்பணி ஐந்தாவது கட்டமாகும். இந்த ஆலயத்துக்கு தேர் இல்லாத ஒருகுறை இருந்து வந்தது. இந்தவருடம் ஆலயநிர்வாகிகளால் மூன்று தேர்களும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்தவருடம் மூன்று தேர்களும் வலம்வருவது கண்கொள்ளா காட்சியாக அமையும். இந்த ஆலயத்தில் ஆனி உத்தரத்திருவிழா மிகவும் சிறப்பாகவும் 13ஆம் திருவிழாவான வேட்டைத் திருவிழாவும் தீர்த்தோற்சவமும் சிறப்பாக இடம்பெறும். வேட்டைத்திருவிழா அன்று பக்தர்கள் விரதம் இருந்து ஆலயத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள இடத்தில் சென்று குழைகளால் தங்கள் உடலை மறைத்து உடல் எங்கும் கரிகளைப்பூசி அம்புகள் வில்லுகள் தாங்கி தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவர்.

**ஒட்டுசுட்டான் தன்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

எம்பெருமான் வேட்டைக்குச் சென்று பலலீலைகளைப் புரிந்து வேட்டையாடி ஆலயம் திரும்பி வாயிலை அடையும்போது இறைவி பூலோக நாயகியாக ஈஸ்வரன் மீது ஊடல் கொண்டு கதவடைத்து விடுவர். பெருமான் திருவேட்டைக்கு செல்கின்றோமென்று காட்டிற்குச் சென்று கெங்கா பரமேஸ்வரியுடன் பலலீலைகளைப் புரிந்து வந்துள்ளார் என ஆலகால சுந்தரருக்கும் சண்டேஸ்வரருக்கும் முறையிடுவதுபோல பாடல் பாடப்பட்டு வாதாட்டம் இடம்பெற்று பெருமானுக்கு வாழைத்தார் கொண்டடித்து பிழைதீர்த்துக் கொண்டும் ஆலயம் வரலாம் என வாதாட்டம் முடிகிறது. இந்த ஆலயத்தில் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் மாதப்பிறப்பு, நவராத்திரி ஆடி அமாவாசை திருவெம்பாவை முதலான தினங்கள் விசேடமாக இடம்பெறும்.



# இது காஸாவின் ஒலி!

ரோம் நகரம் எரிந்துகொண்டிருக்கும்போது நீரோ மன்னன் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான் என்பார்கள். ஆனால், காஸா மீதான தாக்குதலின் வலியைத் தனது ஆத்மார்த்தமான இசையின் மூலம் உலக நாடுகளுக்குக் கொண்டு சென்று வருகிறார் ரஹாப் பதி நாசர்.

அல் அசார் பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவியான ரஹாப், காஸா இஸ்ரேல் போரினால் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மாணவர்களின் முகமாக அறியப்படுகிறார்.

இஸ்ரேல் தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காஸாவிலிருந்து பலஸ்தீனத்தின் பிற பகுதிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுள் ரஹாப்பும் ஒருவர்.

வான்வழித் தாக்குதலில் சிதைந்த கட்டடங்களுக்கு மத்தியில் கிடாரை வாசித்துக்கொண்டே ரஹாப் அளிக்கும் செய்தி உலக மக்கள் அனைவருக்குமானது.

இது குறித்து ரஹாப், 'இஸ்ரேலின் தாக்குதலால் எனது வீடும் தரைமட்டமாகிவிட்டது. சிறு வயதிலிருந்து நான் பயன்படுத்திய இசைக் கருவிகள் பலவும் சேதமடைந்துவிட்டன. எங்களைச் சுற்றி தினமும் நூற்றுக்கணக்கில் குண்டு மழை பொழிந்து வருகிறது. அந்த அளவுக்கு இஸ்ரேல் இடைவிடாது தாக்குதலைத் தொடுத்துவருகிறது. உலக நாடுகள் என் இசையை கேட்கின்றனவோ இல்லையோ நான் தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருப்பேன். என் இசை போருக்கு எதிரானது' எனத் தெரிவித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் மாவட்டச் செயலர்கள் அமைச்சரவையால் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பதில் மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் மாவட்டச் செயலர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் கடமைகளை மேலதிக மாவட்டச் செயலர் எம்.பிரதீபனும், கிளிநொச்சி மாவட்டச் செயலரின் கடமைகளை மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரனும் ஆற்றிவந்தனர். பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சின் கடிதங்களுக்கு அமைய அவர்கள் இந்தக் கடமைகளை மேற்கொண்டு வந்த நிலையில், அவர்கள் இருவரையும் பதில் மாவட்டச் செயலர்களாக நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-125-26)

# பலாலி விமான நிலையத்தில் தகவல் தொடர்பு நிலையம்!

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையம் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகள் இலகுவாக பயணிக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய சுற்றுலா வழிகாட்டிக் கையேடுகளை தகவல் தொடர்பு நிலையத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருள்களும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. (ம-26-125-66)






சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது. (ப-66)

# புடைவைக்கடை மீது பெற்றோல் குண்டு வீச்சு

## நெல்லியடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடமராட்சி - நெல்லியடி நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றின் மீது நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர்களால் குறித்த புடைவை வர்த்தக நிலையத்தின் பின்பக்க கதவு ஊடாக பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது. நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)


## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 11 . 1967

மறைவு
25 . 06 . 2024



### சீவரத்தினம் கோபிதாசன்

சங்கானையை பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் கோபிதாசன் செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சீவரத்தினம் பூமாதேவி தம்பதியரின் அன்பு மகனும், அமரர் செல்லையா கமலாசினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலரின் அவர்களின் அன்புக் கணவரும், குணேஸ், லீணேஸ், கஜனேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசிகலாவின் அன்புச் சகோதரனும், லக்சிகாவின் அன்பு மாமனாரும், துயஸ்ரீனின் அன்புப் பேரனும், நந்தகோபால், செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2024) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

வைட் பூங்கா
கைதடி நுணாவில், சாவகச்சேரி.
தொ.பே: 0766099971
0779977950

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 827) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 12 . 1948

மறைவு
25 . 06 . 2024



### கந்தையா சுப்பிரமணியம்

அராலி கிழக்கு அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (25.06.2024) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், சர்மிளா (UK), பிரமிளா (BOC) ஆகியோரின் அன்புத்தந்தையும், அகிலன் (UK), இரமணகிருஸ்ணா (BOC) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஷ்மிதா (UK), அஸ்ணவி (UK), அமிரேஷ் (UK), வர்ஷித், அக்ஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும், தனேஸ்வரன், தர்மராஜா, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், இராசதுரையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.06.2024) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி வீமன்காமம் இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

188/17 பலாலி வீதி,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
075 764 5658, 076 672 4105

(CS 826) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலைக் கற்கைநெறிகள் நெடுந்தீவில் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 26

நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவனமும் அற்புதம் அறக்கட்டளையும் இணைந்து, கனடா கலைக் கோவில் நுண்கலைக் கல்லூரி ஊடாக நெடுந்தீவில் நடத்தும், நுண்கலைக் கற்கைநெறிகள், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முதற்கட்டமாக நடனம், மிருதங்கம், புல்லாங்குழல் ஆகியவற்றை உள்ளடக்கிய கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளதாகவும், ஏனைய கற்கைநெறிகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கற்கைநெறிகளின் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு, 1008 சங்காபிஷேகம் நாளை இடம்பெறவுள்ளது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து, வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100 ரூபா
077 334 1281

**நாஹா மருத்துவ நிலையம்**
கை, கால் தீவிரவிறைப்பு, தோள்பட்டை வலி, மூட்டுக்கள் தேய்வு, மூளையில் வரும் கட்டிகள், பாரிசவாதம், நீரிழிவு, அல்சர், தீராததோல் நோய்கள் - அமிர்த மருந்தியல்
T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

# கைகலப்பின் போது துண்டாடப்பட்ட கை

## காதல் விவகாரம் காரணமா?

யாழ்ப்பாணம், ஜூன் 26

கைகலப்பின் போது இளைஞர் ஒருவரின் கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நேற்றுக் காலை இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. காதல் பிரச்சினையே மோதலுக்குக் காரணம் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-113)

**தனிப்பட்ட வகுப்புகள்**
தரம் 9 - G.C.E. (O/L)
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
(தமிழ் / ஆங்கில) மொழிமூலம்
நேரில் வந்து கற்பிக்கப்படும்.
விபரங்களுக்கு:
077 447 3343 / 076 889 1321

**St. Patrick's College, Jaffna**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்**
**புதிய அனுமதி - 2025**

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 1 வகுப்புக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவத்தினை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **தரம் 1 இற்கு** அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2019 - 31.01.2020 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றுப் பத்திரமும் புகைப்படமும் சேர்த்து கல்லூரி அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 16.08.2024
- **தரம் 1 இற்கான** அனுமதிப் பரீட்சை 31.08.2024 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(cs 55493) (N-1)
அதிபர்.

சிற்றுண்டிச்சாலைக்கான
விலைமனுக்கோரல்
SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI
இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் - கிளிநொச்சி
கல்வி அமைச்சு
இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தினால் உதயன் பத்திரிகையில் 09/06/2024 இல் பிரசுரிக்கப்பட்ட உணவக நடத்துநருக்கான விலைமனுக்கோரல் முடிவு திகதி 24/06/2024 இல் இருந்து 09/07/2024 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
Chariman-Procurement Committee
SLGTI
(cr.42711) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 10 . 1959 — மறைவு 25 . 06 . 2024

### சுந்தரராசன் திருமணி

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசன் திருமணி நேற்று (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான இராசா - சுந்தரம் (லண்டன்) தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரராசன் அவர்களின் அன்பு மனைவியும், ஜெஸ்ராஜன் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராசா (இந்தியா), இராஜலக்ஷ்மி (லண்டன்), சௌந்தரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிகாயினியின் அன்பு மாமியாரும், அருவி, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
கணவர்
077 331 8350

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(cs 545494) (N-1)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



கடந்த (19.06.2022) அன்று
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர்
### மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
எங்கள் மனம் ஆறவில்லை எப்போதும்
எங்களுக்கு உறுதுணையாக இருந்தீர்கள்
உங்கள் நினைவு என்றென்றும் மறையாது
ஆத்மா சாந்திபெற இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

தோற்றம் 07.12.1959 — மறைவு 19.06.2022

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷைத் தோற்கடித்து

# ஆப்கான் அரையிறுதிக்குள்; ஆஸி. வெளியேற்றப்பட்டது

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷைத் தோற்கடித்து அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது ஆப்கானிஸ்தான்.

இந்தியா, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றிருந்த பிரிவில் இருந்து இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருந்த நிலையில், மற்றைய இடத்துக்கான அணியைத் தீர்மானிக்கும் ஆட்டமாக நேற்றுக்காலை இடம்பெற்ற ஆட்டம் அமைந்தது. அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளின் தலையெழுத்து இந்த ஓர் ஆட்டத்தில் அமைந்திருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சுக்குச் சாதகமான ஆட்டத்தில், ரஹமதுல்லா குர்பராஸ் அதிகபட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். வேறெந்த வீரர்களும் நம்பிக்கையை வழங்கவில்லை. கடைசிக் கட்டத்தில் ரசிட் கான் 10 பந்துகளில் 19 ஓட்டங்களை விளாசினார்.

பந்துவீச்சில் ரிஷாட் கொசைன் 3 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு, ஆரம்ப வீரர் லித்தன் டாஸ் ஒருமுனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் விக்கெட்டுகள் சரிந்தன. ...சிட் ஹொசைன் 0, சான்ரோ 5, சகிப் அல் ஹசன் 0 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க 115 ஓட்டங்களை வைத்து ஆட்டத்தைக் கைப்பற்றும் நிலையை ஆப்கானிஸ்தான் அடைந்தது. ரசிட் கானும் தன் பங்குக்கு சுழல் ஜாலம் காட்டினார். பங்களாதேஷின் விக்கெட்டுகள் மளமளவென சரியத் தொடங்கின. பங்களாதேஷ் வெற்றி பெற்றால் அவுஸ்திரேலியாவுக்கு வாய்ப்பு என்பதால் ஆப்கானின் பந்துவீச்சு பங்களாதேஷைவிட அவுஸ்திரேலியாவையே கலங்கடித்துக் கொண்டிருந்தது. நவீன் உல் ஹக், ரசிட் கானின் கூட்டணி முழுப் பயனைக் கொடுத்தது. 105 ஓட்டங்களில் பங்களாதேஷைச் சுருட்டி டக்வேர்த் முறைப்படி 8 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான். (ம)




## கடற்படைச்...

காங்கேசன்துறைக் கடற்படை முகாமில் விசேட படகுகள் அணியில் கடமையாற்றிய குருநாகல் பகுதியைச் சேர்ந்த ரத்நாயக்க (வயது-40) என்ற கடற்படைச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை அத்துமீறி சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களைக் கைதுசெய்யச் சென்றபோது இலங்கைக் கடற்படைக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையில் மோதல்நிலை ஏற்பட்டுள்ளது. இதன்போதே கடற்படையினரின் படகு மீது இந்திய ட்ரோலர் படகு பலமாக மோதியது. இதில் சிக்குண்டே கடற்படைச் சிப்பாய் கடலிலேயே உயிரிழந்தார்.

அதனையடுத்து, கடற்படையினரால் 10 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாம் ஊடாக துறைசார் அதிகாரிகளிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உடற்கூற்றுப் பரிசோதனை அறையில் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது நெஞ்சுப் பகுதி பலமாக மோதியதால் இறப்புச் சம்பவித்தது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66-26-100-20-125)

## அசாஞ்சே...

விக்கிலீக்ஸ் மூலம் அவர் கசியவிட்டிருந்தார். இதையடுத்து அசாஞ்சேக்கு எதிராக 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அமெரிக்கா வழக்குத் தொடர்ந்தது. இதையடுத்து, பிரிட்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அசாஞ்சே தஞ்சமடைந்திருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி அசாஞ்சேக்கு வழங்கிய அடைக்கலத்தை ஈக்குவடோர் தூதரகம் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து அசாஞ்சே கைது செய்யப்பட்டு பிரிட்டனின் அதியுச்ச பாதுகாப்புச் சிறையான பெல்மார்ஷில் சிறையிடப்பட்டார். வழக்கு விசாரணைகள் தொடர்ந்து வந்த நிலையில், மறுமுனையில் அமெரிக்காவுடன் அவுஸ்திரேலிய அரசாங்கம் புரிந்துணர்வுப் பேச்சுகளிலும் ஈடுபட்டது. இந்தப் பேச்சுகளில் ஏற்பட்ட சில சாதகத்தனமான முன்னேற்றங்களைத் தொடர்ந்தே அசாஞ்சேக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள வழக்கு விசாரணையை அவர் அவுஸ்திரேலியாவில் எதிர்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்கள் மற்றும் சிறப்புரிமைகளைக் கருத்திற்கொண்டு அசாஞ்சேயுடன் அவுஸ்திரேலியத் தூதுவரும் பயணிக்கவுள்ளார். (அ-ம)

## மிக்ஸருக்குள்...

குள் பொரித்த நிலையில் பல்லியொன்று காணப்பட்டுள்ளதையடுத்து, குறித்த விற்பனை நிலையத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவ வழிபாடுகள் இடம்பெற்றன. ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர் ஒருவர் ஆலயச் சூழலிலுள்ள இனிப்புக் கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கியபோது அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். குறித்த விடயம் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இனிப்புக் கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (அ-ச-26-66)

## 64 பவுண்...

கப்பட்டிருந்த 64 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

போலித் திறப்பொன்றைப் பயன்படுத்தி இந்த நகைகள் திருடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. நகைகளைத் தவிர 8 இலட்சம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

## உயர்கல்வித்துறை...

களை வலியுறுத்தி கடந்த மாதம் 2 ஆம் திகதி முதல் 55 நாள்களாகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை வலிந்து வழமைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அரச உயர்மட்டம் ஆணைகளைப் பிறப்பித்திருப்பதாக அறியக்கிடைத்துள்ளது. நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் பாதுகாக்கும் வகையில், படையினரைப் பணிக்கு அனுப்புமாறு கல்வி அமைச்சின் செயலாளர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் நேற்றுமுன்தினம் விடுத்தவேண்டுகோளை அடுத்து நேற்று முதல் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்களின் மின்சாரம் மற்றும் நீர் விநியோகங்களை வலிந்து வழமைக்குக்கொண்டு வரும் வகையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கூடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவுக்கு அறிவித்துள்ளார். (அ-ம-26)

## சர்வதேச...

கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் தெரிவித்ததாவது:-

“காணாமலாக்கப்பட்ட எங்களின் உறவுகளுக்கு நீதிகோரி கடந்த 15 வருடங்களாகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆயினும் எங்களின் போராட்டத்தை அரசாங்கமோ சர்வதேசமோ கண்டுகொண்டதாக இல்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறும், நீதியான சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்குமாறுமே நாம் கோருகின்றோம். இழப்பீட்டையோ அல்லது மரணச் சான்றிதழையோ நாம் கோரவில்லை” - என்றனர். (அ-ம-66-113)

## ஜனாதிபதி...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் குறித்த விசேட உரை நாட்டிலுள்ள அனைத்து இலத்திரனியல் ஊடகங்களின் வாயிலாகவும் ஒளிபரப்பப்படவுள்ளதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-66-26)

## கொள்ளை...

கொள்ளையில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க கோரிக்கையை நிறைவேற்றப் பணம் இல்லை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

ஸ்ரீலங்காவில், தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு திறைசேரியில் பணம் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான பணம் திறைசேரியில் இல்லை. அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்தே அரச ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. அதற்காக இந்த வருடம் ஒதுக்கீடு இல்லாமையால் ஜனாதிபதியினால் விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளமுடியுமான நிலை இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்தார். (ம)



இந்தியாவின் தமிழகத்தின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலான ஆழமற்ற கடற்பரப்பான இராமர் பாலத்தின் செயற்கைக்கோள் புகைப்படத்தை விண்வெளி ஆய்வுக்காக நிறுவப்பட்ட ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது. (ம-66)

# அரசியலில் ரணகளம் தாவல்கள் ஆரம்பம்?

கொழும்பு, ஜூன் 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெறவுள்ள கட்சித் தாவல்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது என்றும் இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

புதிய கூட்டணியின் 2 ஆவது மக்கள் கூட்டம் 29 ஆம் திகதி மொனராகலை, வெல்லவாயவில் நடைபெறவுள்ளது. இதன்போது எதிரணியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து மேடையேறவுள்ளனர்.

நிமல்லான்சா, அநுரபிரியதர்ஷன யாப்பா உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன், ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக உருவாகியுள்ள 'புதிய கூட்டணியில்', சுதந்திரக்கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணி, சுயாதீன எம்.பி.க்கள் சிலர், தமிழ்பேசும் எம்.பி.க்கள் சிலர் அங்கம் வகிக்கின்றனர். இந்த நிலையிலேயே சிலர் ரணில் பக்கம் தாவவுள்ளனர் என்றும் அறிய வருகின்றது. (ஈ-44)


IELTS - 29.06.2024 New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**பஸ் நடத்துநர் வேலைக்கு ஆட்கள் தேவை**
எமது P.P.T நிறுவனத்தில் யாழ்-கொழும்பு அதிசொகுசு பேருந்தில் நடத்துநராக பணிபுரிய ஆட்கள் தேவைப்படுகின்றனர். சம்பளம் ரூபா 50000/= க்கு மேல் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
B.Jude, உரிமையாளர் (P.P.T)
077 386 6250, 077 573 1318

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684
(CS/777) J-1

**கட்டுமான வேலைகள் செய்து தரப்படும்**
உங்களுக்கு விரும்பிய வடிவமைப்பில் வீடு அல்லது கட்டடங்களை மிகவும் நேர்த்தியாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் எங்கள் தேர்ச்சி பெற்ற வேலைக் குழுவினரால் கட்டித்தருகின்றோம். அத்தோடு, கட்டடங்களுக்கான வடிவமைப்பு, வரைபட உருவாக்கம் மற்றும் கட்டட மதிப்பீடு என்பன எம்மால் செய்து தரப்படும்.
தொடர்பு: 076 054 1682
(cs 55485) (N-1)


## மரண அறிவித்தல்



மண்ணில் 10 . 06 . 1947

இறையடியில் 23 . 06 . 2024

**வைத்திலிங்கம் சரவணபவான்**

யாழ்ப்பாணம், குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும், ஜேர்மன் Westring 13, 52457 ஆல்டென்கோவனை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சரவணபவான் கடந்த 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இரத்தினம்மாவவின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், சோபியா, பிரணவன், பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரன், சிந்து ஆகியோரின் மாமனாரும், அவினா, அகன்யா, விதுனன், விகானா ஆகியோரின் அன்புப் பேரனும், பர்வதவர்த்தினி (பபா) காலஞ்சென்ற அருந்ததிதேவி (பேபி), பவானந்தன் (மணி), கோதைநாயகி (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கவேல், சிவசுந்தரம், பாலசுந்தரம், பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 - 12.00 மணிவரை Stad+ Aachen Friedhof Huls என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அம்பிகா (மனைவி) - 0049 152 106 48743
சோபியா (மகள்) - 0044 795 811 8603
பிரணவன் (மகன்) - 0049 178 653 4192
பார்த்திபன் (மகன்) - 0049 176 856 28770

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55491) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க கோரிக்கையை நிறைவேற்றப் பணம் இல்லை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

ஸ்ரீலங்காவில், தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு திறைசேரியில் பணம் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான பணம் திறைசேரியில் இல்லை. அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்தே அரச ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. அதற்காக இந்த வருடம் ஒதுக்கீடு இல்லாமையால் ஜனாதிபதியினால் விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளமுடியுமான நிலை இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்தார். (ம)



இந்தியாவின் தமிழகத்தின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலான ஆழமற்ற கடற்பரப்பான இராமர் பாலத்தின் செயற்கைக்கோள் புகைப்படத்தை விண்வெளி ஆய்வுக்காக நிறுவப்பட்ட ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது. (ம-66)

# அரசியலில் ரணகளம் தாவல்கள் ஆரம்பம்?

கொழும்பு, ஜூன் 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெறவுள்ள கட்சித் தாவல்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது என்றும் இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

புதிய கூட்டணியின் 2 ஆவது மக்கள் கூட்டம் 29 ஆம் திகதி மொனராகலை, வெல்லவாயவில் நடைபெறவுள்ளது. இதன்போது எதிரணியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து மேடை யேறவுள்ளனர்.

நிமல்லான்சா, அநுரபிரியதர்ஷன யாப்பா உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன், ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக உருவாகியுள்ள 'புதிய கூட்டணியில்', சுதந்திரக்கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணி, சுயாதீன எம்.பி.க்கள் சிலர், தமிழ்பேசும் எம்.பி.க்கள் சிலர் அங்கம் வகிக்கின்றனர். இந்த நிலையிலேயே சிலர் ரணில் பக்கம் தாவவுள்ளனர் என்றும் அறிய வருகின்றது. (ஈ-44)

IELTS - 29.06.2024 New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

பஸ் நடத்துநர் வேலைக்கு ஆட்கள் தேவை
எமது P.P.T நிறுவனத்தில் யாழ்-கொழும்பு அதிசொகுசு பேருந்தில் நடத்துநராக பணிபுரிய ஆட்கள் தேவைப்படுகின்றனர். சம்பளம் ரூபா 50000/= க்கு மேல் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
B.Jude, உரிமையாளர் (P.P.T)
077 386 6250, 077 573 1318

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

கட்டுமான வேலைகள் செய்து தரப்படும்
உங்களுக்கு விரும்பிய வடிவமைப்பில் வீடு அல்லது கட்டடங்களை மிகவும் நேர்த்தியாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் எங்கள் தேர்ச்சி பெற்ற வேலைக் குழுவினரால் கட்டித்தருகின்றோம். அத்தோடு, கட்டடங்களுக்கான வடிவமைப்பு, வரைபட உருவாக்கம் மற்றும் கட்டட மதிப்பீடு என்பன எம்மால் செய்து தரப்படும்.
தொடர்பு: 076 054 1682
(cs.55485) (N-1)

## மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 06 . 1947



இறையடியில் 23 . 06 . 2024

**வைத்திலிங்கம் சரவணபவான்**

யாழ்ப்பாணம், குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும், ஜேர்மன் Westring 13, 52457 ஆல்டென்கோவனை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சரவணபவான் கடந்த 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இரத்தினம்மாவவின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், சோபியா, பிரணவன், பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரன், சிந்து ஆகியோரின் மாமனாரும், அவினா, அகன்யா, விதுனன், விகானா ஆகியோரின் அன்புப் பேரனும், பர்வதவர்த்தினி (பபா) காலஞ்சென்ற அருந்ததிதேவி (பேபி), பவானந்தன் (மணி), கோதைநாயகி (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கவேல், சிவசுந்தரம், பாலசுந்தரம், பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 - 12.00 மணிவரை Stad+ Aachen Friedhof Huls என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அம்பிகா (மனைவி) - 0049 152 106 48743
சோபியா (மகள்) - 0044 795 811 8603
பிரணவன் (மகன்) - 0049 178 653 4192
பார்த்திபன் (மகன்) - 0049 176 856 28770

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55491) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.